# புதிய இதயம்

திங்கள் மின்னிதழ்

'CREATING NEW HEARTS TO RISE AND SHINE'

இதழ் 1 | எழு...ஒளிவீசு... எசாயா 60:1 | ஜனவரி - 2022


ஆசிரியரிடமிருந்து....

## இதய அன்பர்களே...

இப்புவியில் மனிதர்களாகிய நாம் ஓர் இனமாக, ஓர் குலமாக, ஓர் குடும்பமாக கடவுளின் பிள்ளைகளாக வாழ்ந்து இன்புற்றிருக்க வேண்டும் என்பதற்காகத்தான் கடவுளின் சாயலாக படைக்கப்பட்டோம். “எல்லோரும் ஒன்றாய் இருப்பார்களாக” (யோவா 17:11) என்ற இயேசுவின் இதய எழுச்சியின் படி, ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற திருமூலரின் கூற்றுப்படி, “யாதும் ஊரே யாவரும் கேளீர்” என்ற கனியன் பூங்குன்றனாரின் ஏக்கப்படி வாழ்க்கையை வாழாமல், இறை வகுத்த இன்ப வழியை விட்டு அவரவர் தன் சொந்த வழிநடந்து, சகோதர அன்பை துறந்து, மனிதநேயத்தை மறந்து, மனிதத்தை இழந்திருப்பதும் உள்ளங்கை நெல்லிக்கனி.

இச்சூழலில், இறைமை மனிதரில் கலக்க, மனிதன் மனிதத்துடன் இணைய, எல்லைகள் கடந்து இறைமையைக் காண, தடைகளை தகர்த்து மனிதம் பேண இறை உறவில் ‘எழுந்து’ மனித அன்பில் ‘ஒளிவீச’...

புதிய இதயம் திங்கள் மின்னிதழ் ~ E. Magazine வெளியிடுவதில் மகிழ்கிறோம். இம்மாபெரும் முயற்சி கடவுளின் உந்துதலால் தொடங்கப்பட்டுள்ளது. இவ்விதழ், தனி மனிதன், குடும்பம், சமூகம் மற்றும் ஆன்மீகம் இணைந்த ஒன்றிப்பு இதழாக ஒவ்வொரு மாதமும் வெளிவரும். இவ்விதழின் நோக்கம் இறை உறவில் எழுந்து மனித அன்பில் ஒளி வீசும் புதிய இதயங்களை உருவாக்குவது (Creating New Hearts to Rise and Shine) இந்த இறைப்பணியில் மானுட மீட்பிற்காக எங்களோடு கைகோர்க்க விரும்புகிறவர்களின் தோழமையை எதிர்நோக்கி இருக்கிறோம்.



இறைவன் உங்கள் தோற்றங்களையோ, செல்வங்களையோ பார்ப்பதில்லை, உங்கள் உள்ளங்களையும், செயல்களையும் பார்க்கிறார். தன் அண்டைவீட்டார் பசித்திருக்க தான் மட்டும் வயிராற உண்பவரும், தன் அயலார்களை வெறுத்து கடவுளை வழிபடுபவரும், சாதி, மத, இன, மொழி காக்க மனிதநேயத்தை புதைப்பவரும் இறை நம்பிக்கையாளராக இருக்க முடியாது.

எனவே, எழுவோம்! ஒளி வீசுவோம்! (எசா 60 : 1) இறை உறவில் எழுந்து மனித அன்பில் ஒளிவீசும் புத்தாண்டு ~2022 நமதாகட்டும். பொங்க வேண்டியதற்கு பொங்காத பொங்கல் இனி இல்லை, பொங்க வேண்டியதற்கு பொங்க வேண்டிய பொங்கலோ.. பொங்கல் நம் கொண்டாட்டமாகட்டும். இதயம் நிறை புத்தாண்டு, தமிழர் திருநாள் நல்வாழ்த்துக்களும்.. செபங்களும்.

என்றும் அன்பில்..

அருள்பணி. இ. ஜோசுவா..

புதிய இதயம்
திங்கள் மின்னிதழ்




# மாணவரே நில்.... கவனி மாணவியரே

"ஜோசப் ஜோசப். எழுந்திரு .. எழுந்திருடா.. மணியைப் பாரு ஐந்தாகுது... படிக்க வேணாமா? இன்னிக்கு உனக்கு பரிட்சை எழுந்திருப்பா.. படி ... அப்பா உனக்கு காபிபோட்டு எடுத்திட்டு வர்றேன்," என்றார் ஜோசப்புடைய அப்பா.

"ஐயோ இந்த அப்பாவோடு ரொம்பதொல்லையா இருக்கு எப்பப்பார்த்தாலும் படி, படி, படினு நச்சரிச்சுக்கிட்டே இருக்காரு... எங்கேயாச்சும் ஓடி போலாமானு இருக்கு," என்று மிகச்சலிப்புடன் முணுமுணுத்துக்கொண்டே எழுந்தான் ஜோசப்,

என்ன பிள்ளைகளே, இந்த முணு முணுத்தல் எங்கேயோ கேட்டமாதிரி இருக்குதா இல்ல இந்த" டைலோக்" யாரோ வீட்டிலே சொன்னமாதிரி இருக்குதா? என்னடா இந்தக்கதை வளரவுமில்லை முடியவுமில்லைனு நினைக்கிறீர்களா? இந்தக்கதையோடு ஆரம்பமும் வளர்ச்சியும் முடிவும் உங்கள்கையில் தான் இருக்கிறது. இது மாணவர்களாகிய உங்களுடைய ஆரம்பமாகும். உங்கள் பெற்றோர்கள் உங்களை படி, படி படிப்பில் அக்கறை செலுத்து என்று கூறுவது எதற்காக என்று எப்போழுதாவது சிந்தித்துப்பார்த்திருக்கிறீர்களா? கல்வி என்பது வாழ்க்கையின் அடித்தளம். கல்வி இல்லையென்றால் அவன் ஒன்றுமில்லை என்ற கூற்றை நான் உங்கள் மனதில் ஆழமாகப்பதிக்க ஆசைப்படுகிறேன். ஆண்டவர் கூறுகிறார் பொன்னைவிட ஞானத்தைப்பெறுவதே மேல், ஞானம், கல்வி, அறிவு இதை நீங்கள் பெற எவ்வளவு முயற்சிசெய்திருக்கிறீர்கள்?


இந்த இரண்டு வருடகாலமாக கொரோனா என்னும்தொற்று நோயினால் மாணவர்களாகிய நீங்கள் பள்ளிக்குச்செல்ல இயலவில்லை இல்லிருப்பு கற்றல் வழி நீங்கள் உங்கள் பாடங்களைப் படித்தீர்கள். ஆனால், எத்தனை பேர் உண்மையாக இல்லிருப்புக்கற்றலில் முழுமையாகப் பங்கெடுத்து படிப்பில் சிறந்து விளங்குகின்றீர்கள்? இல்லை கைப்பேசியில் "கேம்" வியைாடுவது, படம் பார்ப்பது, நண்பர்களுடன் அரட்டை அடிப்பது என்று உலகமே கைப்பேசிதான் என்று அதில் மூழ்கிவிட்டீர்கள். வெளிவாருங்கள் பிள்ளைகளே இந்தக் கைப்பேசி என்னும் சாத்தானை விட்டு வெளிவாருங்கள். இது அல்ல வாழ்க்கை, இது அல்ல உங்கள் இலட்சியம். உங்கள் வாழ்க்கையின் வெளிச்சம் கல்வி ஒன்றுதான். கல்வி ஒன்றுதான் உங்கள் தலைமுறையையே மாற்றக் கூடிய வல்லமை பெற்றது. உங்களுடைய குடும்பத்தின் தலையெழுத்தை மாற்றக்கூடிய ஒரே ஆயுதம்.

எங்க அம்மா சொல்லுவாங்க "நீ படிக்கல குப்பை அள்ளர வேலைக்குத்தான் போவனு" ஆனால், இப்பொழுது அந்தக்குப்பை அள்ளும் வேலைக்குக்கூட குறைந்தபட்சம் கல்விதேர்ச்சி இருக்க வேண்டும் என்பது விதிமுறையாகி விட்டது. ஆகவே, சிந்தியுங்கள் மாணவர்களே இது உங்களுடைய நேரம். இந்த வயது, நீங்கள் படிக்க வேண்டிய வயது. கல்வியை முழுமையாகப் பெற்றுக்கொள்ளும் வயது. உங்களுக்கான வாய்ப்புதான் உங்களைச்சுற்றி அதிகமாகவே உள்ளது. காற்றுள்ளபோதே தூற்றிக்கொள் என்பதுபோல இந்த பருவத்திலேயே படியுங்கள். சிறப்பான தேர்ச்சியைப்பெற உங்களின் முழு உழைப்பைப் போடுங்கள் முழு முயற்சியுடன் படிப்பில் இறங்குங்கள். துணிந்து செயல்படுங்கள் உங்களுக்கான வெற்றி உங்களை வந்தடையும்.

– வெரோனிகா தாமஸ்
மலேசியா

கட்டுரை

# இறைவார்த்தை வழி எதிர்கால நம்பிக்கை



விஞ்ஞானிகளும், மருத்துவ நிபுணர்களும் இத்தொற்று நோயை தடுக்க மருந்து அண்மையிலேயே கண்டுபிடித்துள்ளனர். ஆயினும் முழுமையான தீர்வு வரவில்லை. மனித ஆற்றலால் இது முழுமையாக முடியவில்லை.

## ஆனால் கடவுளால் எல்லாம் இயலும்...

எரேமியா 32 : 27 நானே ஆண்டவர் எல்லா மக்களுக்கும் கடவுள் நானே அப்படியிருக்க எனக்கு கடினமானது எதுவும் உண்டோ?.

திபா.118 : 7 எனக்குத் துணை செய்யும் ஆண்டவர் என் பக்கம் உள்ளார். இந்த நெருக்கடியான துயரவேளையில் இயேசுவை அழைத்தால் அவர் என்னன விடுவிப்பார். (118 :5)

நாம் வழிபடுகின்ற உண்மை கடவுளான இயேசுவிடம் மானிடர் அனைவரும் மனம் வருந்தி, அழுது, புலம்பி, தவம் செய்து பாவத்திலிருந்து விடுபட்டு அவரிடம் வந்தால் அவரே முழு விடுதலையும் மீட்பும் அருள்வார் (விடு 23 : 23) செங்கடலை இரண்டாகப் பிரித்து இஸ்ரவேல் மக்களை காப்பாற்றிய கடவுள் நம்மோடு இருக்கிறார். அவர் இம்மானுவேல் உலகம் முடியும் வரை நம்மோடு இருக்கிறார். (மத்தே 28 :20) நம் பிரச்சனைகளைவிட இயேசு பெரியவர். எனவே இயேசுவால் எல்லா பிரச்சனைகளுக்கும் தீர்வு கொடுக்க முடியும். யோவா 8 : 3 - 11.

2. குறிப்பேடு 7:13 : 14
நான் மழை பெய்யாதவாறு வானத்தை அடைத்தாலும், நான் நாட்டை அழிக்க வெட்டுக்கிளிகளுக்கு கட்டளையிட்டாலும் என் மக்களிடம் கொள்ளை நோயை அனுப்பினாலும், எனது பெயரை போற்றிடும் என் மக்கள் சிறுமையுற்றாலும், தங்கள் பாவத்தினின்று மனம் வருந்தி, இரந்து மன்றாடி என் திருமுகத்தை நாடினால், வானகத்திலிருந்து அவர்களது மன்றாட்டுகளைக் கேட்டு அவர்கள் பாவங்களை மன்னிப்பேன். அவர்களது நாட்டுக்கு நலன் அளிப்பேன்.

இன்று உலகமே கடந்த 2 ஆண்டுகளுக்கு மேலாக கொடிய கொரோனா, என்ற தொற்று நோயினால் பாதிக்கப்பட்டு மக்கள் எல்லாரும் மரண பயத்தாலும் துன்பத்தாலும் துயரத்தாலும் முடங்கிக்கிடக்கின்றனர். 5 மில்லியனுக்கும் அதிகாமான மக்கள் மாண்டுள்ளனர். லட்சக்கணக்கான மக்கள் மருத்துவ முகாம்களில் உயிருக்கு போராடி சிகிச்சை பெற்று வருகின்றனர். உலகமே பொருளாதார வீழ்ச்சியடைந்து மக்கள் சுதந்திரமாக நடமாடமுடியாமல் பெரும்பாலோர் தனிமைப்படுத்தப்பட்டு கண்ணீரோடு வாழ்கின்றனர். ஆலயங்கள், பள்ளிக்கட்டிடங்கள் என எல்லா தளங்களும் முழு இயக்கம் பெறவில்லை.

நாம் சுமக்கும் துன்பங்கள், சுமைகளைவிட இயேசு பெரியவர் மத் 11 : 28 - 30.

ஆகவே இனிய சகோதர சகோதிரிகளே திபா 91:3 கொன்றழிக்கும் கொள்ளை நோயினின்றும் தப்புவிப்பேன் என்று கூறுகின்ற மூவொரு இறைவனிடம் நாம் சரணடைவோம். கட்டளைகளைக் கடைப்பிடிப்போம். இறை இயேசுவிடமே நாம் தஞ்சமடைவோம். அவரே நம்மை மீட்பார். நலமிக்க நல்வாழ்வு நல்குவார்.

சி.ஜேசுதாஸ்,
தமிழ் அருங்கொடை தலைவர்,
மலேசியா

# உயிர்மநேயம் போற்றும் தமிழர் திருநாள்




சதீஷ் குமரன்,
உதவிப்பேராசிரியர்
கலைக்காவிரி நுண்கலைக்கல்லூரி, திருச்சி.

**'ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும் திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்' என்று சிலப்பதிகார பெருங்காப்பியத்தின் முதல் வரியிலேயே இயற்கையைப் போற்றும், பாடும் பெருமரபு தமிழர் மரபு.**

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வர் மற்றோரெல்லாம் தொழுதுண்டு பின் செல்பவர் சுழன்றும் ஏர்பின்னது உலகம். அதனால் உழந்தும் உழவே தலை உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் - வீணில் உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம் எனும் அறக்கோட்பாட்டின்படி உழவு உலக உயிர்களைக் காத்திடும் என்பதால் நிலத்தை முதற்பொருளாக வைத்தனர் தமிழர்கள். நிலமே நம் அடையாளம், நிலம்தான் நம் பண்பாட்டின் வளம். உலகிலுள்ள பல்வேறு இனக்குழுக்களில் ஐந்திணை மரபுசார் வாழ்வியல் அமைப்புமுறை உள்ளதா என்பது ஆய்வுக்குரியது. ஆனால் தமிழர் வாழ்வியல் என்பது திணைசார் வாழ்வியல் ஆகும். திணைசார் வாழ்க்கை முறைதான் தமிழ்ச் சமூகத்தின் செழுமை, வளமை, பெருமை, நன்மை யாவையும் கொணர்ந்துள்ளது. 'நிலம், தீ, நீர், வளி, விசும்போடு' ஐந்தும் கலந்த மயக்கம் உலகம் ஆதலின்' எனத் தொல்காப்பியமும்

"மண்திணிந்த நிலனும்
நிலன் ஏந்திய விசும்பும்
விசும்புதைவரு வளியும்
வளித்தலைஇய தீயும்
தீமுரணிய நீரும்
என்றாங்கு ஐம்பெரும் பூதத்து
இயற்கை போல"

என புறநானூறும், பூவுலகை ஐம்பெரும் பூதங்களால் ஆன சேர்க்கை என்கிறது.

பண்டைய எகிப்து நாகரிகம், சுமேரிய நாகரிகம், சிந்துவெளி நாகரிகங்கள் யாவிலும் உலகைப் படைத்தது வழிநடத்தியது சமயம் சார்ந்த பூசாரியமே எனக் குறிப்பிடுகிறது வரலாறு. தமிழர் நாகரிக அறிவுலகம்தான் பூசாரியம் அல்லாத இயற்கை சார்ந்த திணைசார் வாழ்வியலை முன்னுறுத்தியதாக சூழலியல் அறிஞர் பாமயன் குறிப்பிடுகிறார். எனவே தமிழர்க்கு முதல்பொருள் என்பது நிலமும் பொழுதும்தான். எனவே நிலத்தை நிலம்சார்ந்த நுண்ணுயிர்களை, சிற்றுயிர்களை, பேருயிர்களை வேளாண்மைக்கு துணை செய்யும் கால்நடைகளை போற்றுவது பாதுகாப்பது கொண்டாடுவது தமிழர் பண்பாடாக வளர்ந்தது. பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புவதே தலையாய அறமாக தமிழர் வாழ்வியலை உயர்த்தியது. இதனுடைய நீட்சியாகவே ஆண்டுதோறும் நிலத்தையும் பொழுதையும் விளைச்சலையும் வணங்கி கொண்டாடும் தமிழர் திருநாளாகும். உலகெங்கும் அறுவடைத் திருநாளாக தமிழர்களாலும் பல இனக்குழுக்களாலும் கொண்டாடப்படுகிறது.

ஆடியில் விதைப்புக்காலம் தைமாதம் அறுவடைக்காலம் உழவுத் தொழிலுக்கு உற்றத்தோழனாய் காவலனாய் உழவர்களுக்குத் துணைநிற்கும் கால்நடைகளுக்கு இயற்கைக்கு நன்றி தெரிவித்தலின் நேயம் போற்றும் திருநாளாக கொண்டாடப்படுகிறது. அறுவடையில் கிடைத்த நெல்லின் புத்தரிசி, நாட்டுக்கரும்பின் சாற்றில் பாகுகாய்ச்சி செய்யப்பட்ட அச்சு வெல்லம், பசும்பால் நெய் சேர்த்துப் புதுப்பானையில் புது அடுப்பில் கொதிக்க வைத்து பொங்கல் பானையில் உலைபொங்கும் போதும் அரிசி இட்டப்பின்னும் பொங்கி வரும்போது „பொங்கலோ பொங்கல்„ என்று குளவை இட்டு இறக்கி வைத்து வாழை இலையில் படையல் இட்டு சூரியனுக்குப் படைத்து வணங்குவர். பிறகு குடும்பங்கள் உறவினர்கள் கூடி உண்டு மகிழ்வர். பொங்கலுடன் கொடிவழி காய்கள், செடி வகை காய்கள் கிழங்கு வகைகள் யாவற்றிலும் குழம்பு பொரியல் செய்வர், பரங்கிக்காய் எப்போதும் பொங்கலன்று உணவில் பெருமை சேர்க்கும். ‘பொங்கு’ என்ற சொல் கொதித்தல், மிகுதல், சமைத்தல், செழித்தல் எனப் பொருள்படும். அனைத்து சமயத்தவரும் கொண்டாடும் உலகின் மூத்த திருநாள் தமிழர் திருநாளே.

## சங்க இலக்கியங்களில் தைப்பொங்கல்

‘தைஇத் திங்கள் தண்கயம் படியும்’ என நற்றிணையும்
‘தைஇத்திங்கள் தண்ணிய தரினும்’ என குறுந்தொகையும்
‘தைஇத் திங்கள் தண்கயம் போல்’ என்று புறநானூறும்
‘தையில் நீராடி தவம் தலைப்படுவாயோ’ என்று கலித்தொகையும்

ஐங்குறுநூறும் தைப்பொங்கலின் சிறப்புகள் குறித்து பதிவு செய்துள்ளது. உழைப்பின் பயனை விளைச்சலை ஒன்றுசேர்ந்து கூடி கொண்டாடும் இத்திருநாளின் முதல்நாள் போகிப் பண்டிகை அதனைத் தொடர்ந்து, பொங்கல் மாட்டுப்பொங்கல், காணும் பொங்கல் என நான்கு நாட்கள் கொண்டாடப்படுகிறது. மாட்டுப்பொங்கல் அன்று தன்வாழ்நாள் முழுதும் தனக்காகவும் தன்னுடைய உழவுக்கும் துணைநிற்கும் கால்நடைகளைக் குளிப்பாட்டி வண்ணப் பொட்டிட்டு, சலங்கை, மணிகள் கட்டி, எருதுகளுக்கு கொம்புகள் சீவி வண்ணமடித்து, குப்பிசலங்கை கட்டி அறுவடை செய்த வரப்புகளில் வளர்ந்திருக்கும். அருகம்புல்லை அறுத்து தீனியாக வழங்குவர். அடிகாட்டுக்கு நடுமாட்டுக்கு நுனிவீட்டுக்கு என்ற வேளாண் பெரியார் கோ.நம்மாழ்வார். அடிக்கடி குறிப்பிடுவதைப் போல விளைந்து நிற்கும் நெல்மணிகள் வீட்டிலும் வைக்கோல் மாட்டுக்கும் அடிக்கட்டை தழையுரமாக வயலுக்கும் ஆக்குவது நமது உழவு மரபு. பிறகு மருதநிலத்திலும் முல்லை நிலத்திலும் மாட்டுப் பட்டியில், வாசலில் காப்புக் கட்டுவர் தோரணங்கட்டுவர், இருபுறமும் செங்கரும்பு கட்டி புளிச்சகீரை நாரில் செய்த கயிற்றில் தோரணக்காப்பு கட்டுவர் தோரணத்தில் மூங்கில், பாலை இலை, மஞ்சள் கொத்து, ஆவாரம்பூ, சிறுபீளைப் பூ வேப்பந்தழை, யாவற்றையும் கோர்த்துக் கட்டுவர். இத்தோரணக் காப்பு வெறும் சடங்காக கட்டுவதல்ல, இன்றைய காலகட்டத்தில் சடங்காகிவிட்டாலும் தோரணத்தில் கட்டப்படும் ஒவ்வொன்றும் அரிய மூலிகைகளாகும். தை மாதம் பின்பனிக்காலம் முடிந்து இளவேனில் முதுவேனில் காலங்களில் வீட்டில் உள்ளவர்களின் உடல் நலத்தைப் பாதுகாத்திடும் பதப்படுத்தி வைக்கும் முறையாகவே “தோரணக் காப்பு” கட்டப்படுகிறது. சிறுபீளைப்பூ வெயில்மிகு கோடைக்காலங்களில் நீர்ப்பற்றாக்குறையால்

சிறுநீர்ப்பையில் ஏற்படும் கல்லை உடைக்கும் தன்மையது, ஆவாரம்பூ நமக்குக் கிடைத்த அரிய காயகல்பமாகும் “ஆவாரைப் பூத்திருக்க சாவாரைப் பார்த்ததுண்டோ” எனும் சொலவடை நம் மண்ணில் உண்டு. பாதம் முதல் உச்சிவரை உடலுக்கு வெப்பம் தணித்து குளிர்ச்சி தரக்கூடியது ஆவாரை. மூங்கில் 24 மணி நேரமும் உயிர்க்காற்று தீ தருவது, மஞ்சள் அரிய மூலிகை, அடுப்படியில் அஞ்சறைப்பெட்டியில் தொடங்கி உடலுக்கும் உயிர்களுக்கும், சுகாதாரம் பேணுவதிலும் தலைமை

மூலிகை மஞ்சள், வேபந்தழை நச்சுக்கிருமிகளை விரட்டும் தன்மையது.

எனவேதான் காப்புத் தோரணம் ஒவ்வொரு குடிகளையும் காக்கும் காப்பாக அமைகிறது. "பட்டிப்பெருக பெருக பால்பானை பொங்க பொங்க பொங்கலோ பொங்கல்" என்று மக்கள் கொண்டாடுவர்.

## தமிழர் திருநாளும் ஏறுதழுவலும்

தமிழர் பண்பாட்டின் முதன்மையான அடையாளங்களில் ஒன்று ஏறுதழுவல். சங்ககாலம் தொடங்கி இன்று வரை காலந்தோறும் தமிழர் நிலத்தை, வளத்தை செம்மையை உழவனின் மாண்பை காத்து வருவது காளைகள் என்றால் மிகையில்லை. சமயம்சாரா தமிழர் மரபிலும் சமயம் சார்ந்த தமிழர் மரபிலும் காளை வாகனம் முதன்மையான அங்கமாக திகழ்கிறது. குறைந்த அளவில் கணக்கிட்டாலும் 5000 ஆண்டுகளாய் தொடர்கிறது ஏறுதழுவல் பண்பாடு.

சங்க இலக்கியங்கள், பாறை ஓவியங்கள், குகை ஓவியங்கள், கல்வெட்டுகள், நடுகற்கள், காப்பியங்கள், சமய இலக்கியங்கள், சிற்றிலக்கியங்கள், இன்றைய நவீன இலக்கியங்கள் வரை விரிந்து பரந்த வளமை கொண்டது ஏறுதழுவல்.

### "கொல்லேற்றுக் கோடு அஞ்சுவானை மறுமையும் புல்லாளே ஆயமகள்"

என்ற முல்லைக்கலி பாடல் வரிகளுக்கேற்ப நெஞ்சுரம் கொண்ட தமிழர்கள் தமிழக இளைஞர்கள் ஜல்லிக்கட்டுக்கு தடை வந்தபோது தமிழகமும் உலகத்தமிழர்களும் ஒன்றிணைந்து களமாடி அறத்தோடு நின்று, வென்று இந்திய அரசியலமைப்புச் சட்டவரிகளை மாற்றிக் காட்டிய வரலாறு உலகில் எங்கேயும் கண்டதில்லை. திமிலும் தமிழும் தமிழர்களின் இருகண்கள் பண்பாட்டின் கிரீடங்கள்.

தமிழர் தம் ஐந்திணை நிலங்களிலும் ஏறுதழுவல் தமிழர் திருநாளையொட்டி நடந்து வருகிறது. காளை என்பது வளமையின் குறியீடு.திறம் திடம் துடிப்புமிக்க காளைகளால்தான் சிறந்த கன்றுகளை வழங்க முடியம். அதனால் வேளாண்மை சிறப்படையும், விளைச்சல் பெருகும்.

அண்மையில் கீழடியில் நடைபெற்ற அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட கால்நடை எலும்புக்குவியல்களில் திமில் கொண்ட காளைமாட்டின் எலும்பு நம் பண்பாட்டின் வளமையை உலகிற்கு பறைசாற்றியது குறிப்பிடத்தக்கது.

சிந்துவெளி முதல் வைகை வெளி வரை தமிழர் வளமையின் சின்னமாக ஏறு திகழ்கிறது. எனவே உழவர் திருநாள், அறுவடைத்திருநாள் உலகத்திருநாளாக அமைந்துள்ளது.

உழவர்களை போற்றாத அரசு, பாதுகாத்திடாத அரசு, விளைச்சலுக்கு உற்பத்திக்கு குறைந்த அளவு விலை தராது போனால் எத்தகைய அதிகாரமும் வீழும். உழவர்களின் குரலுக்கு செவிசாய்க்காமல் போனால் உலகம் இயங்காது. உழவர்கள் ஒன்றிணைந்தால் மாற்றமுடியாததையும் மாற்றுவர். எனவே கொம்புகள் கொண்ட தமிழையும் கொம்புவச்ச திமிலையும் 'தமிழர் திருநாளில்' கொண்டாடுவோம்.

---




Art by
**Renie Swetha. F, B Arch**
*Chennai*

## கல்வியின் மேன்மை

‘அறியாமை என்னும் இருளை
அகற்றி அறிஞனாக்கும்...
அஞ்சுபவனையும் அரியணையில்
அமர வைக்கும்...
அநீதியை எதிர்த்துக்
குரல் கொடுக்கும்...
மூடப் பழக்கவழக்கங்களுக்கு
முற்றுப் புள்ளி வைக்கும்...
குருடரையும் ஒளி விளக்காக்கும்...
முடவரையும் முயலாக்கும்..
ஊதாரியையும் உத்தமனாக்கும்..
இவற்றை விட ..
“சமத்துவத்தைப் போற்றி
உலகில் சமாதானம் விளைவிக்கும்”. !





## முயற்சி

தடைகள் பல ஆயிரம்
உன் கண் முன்னே தோன்றினாலும்
வழிகள் ஒன்றை கண்டறிந்து
அதை உன் ஏணி படியாக்கி
தடைகள் கடந்து வெற்றி
எனும் கனியை உன்
முயற்சிக்கு விருந்தாக்கு!

— சபிதா
சிவகங்கை மாவட்டம்

## புத்தாண்டு –2022




நல்லவை நினைத்து
நல்லொழுக்கம் பேணி
நல் உறவு வளர்த்து
நற்செயல் புரிந்து
இல்லாருக்கும் உதவி
இல்லத்தில் இன்பமும்
உள்ளத்தில் மகிழ்வும்
குறையற்ற வாழ்வும்
குன்றாது இருக்க
புத்தாண்டே வருக!!

— சவேரியா நிசாண்டா
சிவகங்கை மாவட்டம



## உலகின் ஒளி நானே

சார்ல்ஸ் பீட்டர்
இம்மானுவேல் தமிழ்குழு நிறுவனர்
கட்டார்

யோவான் 8:12 இல் இயேசு கூறுகின்றார் “உலகின் ஒளி நானே, என்னை பின் தொடர்பவர் இருளில் நடக்கமாட்டார் வாழ்விற்கு வழிகாட்டும் ஒளியைக் கொண்டிருப்பார்”

“ஒளி” என்ற சொல்லின் எளிமையான பொருள் (அர்த்தம்) சக்தியின் ஒரு பரிமாணம், ஒரு வடிவம் என்று கூறலாம். அதன் வேறொரு பொருள் “பல நல்ல விடயங்கள்” (Many Good Things) என்பதாகும் இயேசு “நானே ஒளி” என்று கூறும்போது, இவ்வுலகிற்கு தேவையான

அனைத்து நன்மைகளையும் தன்னகத்தே கொண்டுள்ளார் என்று பொருள்பட கூறுகின்றார்.

இயேசு அனைத்து காலத்திலும், அனைத்து மக்களுக்கும் ஒளியாக இருக்கின்றார். அவ்வொளியில் நாம் நம் உள்ளத்தின் இருளை அகற்றி ஒளி வீசலாம் அவ்வொளியில் நாம் முழுமை பெற்றவர்களாக வாழலாம் அவ்வொளியில் நாம் சான்றோர்களாக வாழலாம்.

“யோவான் 9:5 இல் இயேசு இவ்வாறு கூறுகின்றார், “நான் உலகில் இருக்கும் வரை நானே உலகின் ஒளி” அப்படியென்றால் அதன் பின்பு “யார் ஒளி” என்ற கேள்வி எழும்புகின்றது, அதற்கு இயேசு மத்தேயு 5:16 இல் இப்படி பதிலளிக்கிறார்.

“நீங்கள் உலகிற்கு ஒளியாக இருக்கின்றீர்கள்” ஆம், நாம் தான் இப்போது இவ்வுலகின் ஒளி. எப்படி தானாகவே ஒளிராத சந்திரன் கதிரவனின் ஒளியை பிரதிபலித்து (Reflect) இவ்வுலகின் காரிருளை அகற்றி இவ்வுலகிற்கு ஒளியூட்டுகின்றதோ, அதேபோல் நாமும் இயேசு என்னும் ஒளியை நம் வாழ்வில் பிரதிபலித்து இவ்வுலகிற்கு ஒளியூட்ட வேண்டும்.

இறைமகன் இயேசுவே நிலையான ஒளி, அந்த ஒளிக்கு தொடக்கமும் இல்லை, அந்த ஒளிக்கு முடிவும் இல்லை. ஆம், அந்த ஒளி முடிவில்லாதது அவ்வொளியில் நாம் வாழ்வோமாகில், அவ்வொளியானது நம் வாழ்வை படிப்படியாக ஆனால் உறுதியாக ஒளிமயமாக்கும்.

மேலும் மத்தேயு 5:16 இல் “உங்கள் ஒளி மனிதர் முன் ஒளிர்க! அப்பொழுது அவர்கள் உங்கள் நற்செயல்களைக் கண்டு உங்கள் விண்ணகத் தந்தையைப் போற்றி புகழ்வார்கள்” ஆம் நாம் மற்றவர்களது வாழ்வில் ஒளியேற்ற அழைக்கப்பட்டுள்ளோம். அப்பொழுது நம் தந்தையான இறைவன் மற்றவர்களால் மகிமைப்படுத்தப்படுவார்.

நாம் ஒருகணம் நம்மையே ஆராய்ந்து பார்ப்போம். “நாம் மற்றவர்களின் முன்னிலையில் ஒளிர்கின்றோமா?” “மற்றவர்கள் நம் வாழ்வில் ஒளியின் கனிகளை காண்கின்றார்களா?” “நாம் இயேசுவை நம் சொற்களாலும், செயல்களாலும் பிரதிபலிக்கின்றோமா?” சிந்திப்போம், செயல்படுவோம் இவ்வுலகிற்கு இயேசு என்னும் ஒளியை பிரதிபலிப்போம்.

# குடும்ப அறம் காப்போம்

உலகம் முழுவதையும் வார்த்தையினால் உருவாக்கிய இறைவன், மனிதனை மட்டும் தனது கரங்களால் படைத்து, தனது உயிர் மூச்சைக் கொடுத்து அவரது உருவிலும், அவரது சாயலிலும் உருவாக்கி தனது அன்பை வெளிப்படுத்தினார். (தொநூ 2:7) அதிலும் நிறைவைக் காணாத இறைவன், “மனிதன் தனிமையாக இருப்பது நல்லதன்று: அவனுக்குத் தகுந்த துணையை உருவாக்குவேன்” (தொ.நூ 2:18) என்று கூறி ஆணிடமிருந்து பெண்ணை உருவாக்கி முதல் குடும்பத்தை இந்த உலகில் நிறுவினார். மீட்பின் திட்டத்தை இந்த உலகில் செயல்படுத்த தனது ஒரே மகனை உலகிற்கு அனுப்ப முடிவு செய்தபோது மரியா – யோசேப்பு என்ற குடும்பத்தை தேர்வு செய்து (மத்1:22-25) திருக்குடும்பத்தின் முன்மாதிரியை அமைத்துத் தந்தார். அன்னை மரியாள் வழியாக இறை மகன் இயேசு கிறிஸ்து உலகினருக்கு வெளிப்படுத்தப்படுவதற்கு அவர் செய்த முதல் அரும் அடையாளம் அரங்கேறியது (யோவா 2:11) கானாவூரில் நடைபெற்ற திருமணத்தில்தான்.

உலக அளவில் 28% கத்தோலிக்கர்கள் மண முறிவை பெறுகின்றனர். அமெரிக்கர்களிடையே 50% திருமணங்கள் விவாகரத்தில் முடிவடைகின்றது. இந்தியாவில் 2021- ஆம் ஆண்டு மத்தியில் குற்றங்களின் விகிதாச்சாரம் 44.43% ஆகும். ஆசிய அளவில் இந்தியா குற்றங்களின் பட்டியலில் 16-ஆவது இடத்தில் உள்ளது. நகர்ப்புற இந்தியாவில் கூட்டுக் குடும்பங்களின் விகிதம் 19.1% லிருந்து 16% மாக குறைந்துள்ளது. இதுவே கிராமப்புற இந்தியாவில் 20% லிருந்து 16% மாக குறைந்துள்ளது.

இந்த புள்ளிவிவரங்கள் நமக்கு மறைமுகமாக உணர்த்தும் உண்மை என்னவெனில், இறைவனால் பார்த்துப் பார்த்து அன்புருக உருவாக்கப்பட்ட குடும்பங்களின் தற்போதைய நிலைமை அந்தோ பரிதாபம்! குடும்பங்களின் மாண்பும், மகத்துவமும் சிதைக்கப்பட்டு வருகின்றது. என்றால் அது மிகையாகாது. ஆம்! குற்றமற்ற சமுதாயத்தை நோக்கிய பயணத்திற்கு துணைபுரிவது நேர்த்தியான குடும்பங்கள். கிறிஸ்துவின் அன்பை உலகிற்கு வெளிப்படுத்தும் உன்னத கருவியாக குடும்பங்கள் திகழ வேண்டும்.

பிரதிபலன் எதிர்பார்க்காத இயேசுவின் தியாக அன்பிற்கு கிடைத்தது சிலுவை மரணம். அதுபோன்று இன்றைய காலகட்டங்களில் தன்னுடைய சுகதுக்கங்களை மறந்து, மறுத்து பிள்ளைகளுக்கு தியாக அன்பை வெளிப்படுத்தும் பெற்றோருக்கு கிடைக்கும் பரிசு முதியோர் இல்லங்கள். குடும்பங்களின் தன்மையும், உறவு முறைகளும் காலத்திற்கு ஏற்றவாறு மாறி வருகின்றன என்பது

ஒரு கசப்பான உண்மையாகும். நமது குடும்பங்கள் எந்த இடத்தில் தடமாறுகின்றன என்று சற்று ஆழமாக சிந்திக்க வேண்டிய கட்டாயத்தில் நாம் அனைவரும் இருக்கின்றோம்.

முதியோர்களின் பராமரிப்பில் தாத்தா, பாட்டியின் மடியில் அமர்ந்து நீதிக் கதைகள் கேட்டு வளர்ந்த நாட்கள் மறைந்து போய்விட்டன. அதனால் நன்மை தீமைகளை உய்த்துணரும் ஆற்றல் பிள்ளைகளிடம் குறைந்து போய்விட்டன. நாம்~ முதல் தலைமுறை,

தந்தை + தாய் - இரண்டாம் தலைமுறை
பாட்டன் + பாட்டி - மூன்றாம் தலைமுறை
பூட்டன் + பூட்டி – நான்காம் தலைமுறை
ஓட்டன் + ஓட்டி – ஐந்தாம் தலைமுறை
சேயோன் + சேயாள் ~ ஆறாம் தலைமுறை
பரன் + பரை – ஏழாம் தலைமுறை
பரன் + பரை – பரம்பரை




இந்த சொல்லாடல் நம்மில் எத்தனைப் பேருக்கு பரிட்சயம்? கூட்டுக் குடும்பங்கள் சிதைந்து தனிக்குடும்பங்கள் உருவானதும், நாம் இருவர் நமக்கு ஒருவர் என்ற சித்தாந்தங்கள் வேரூன்றப்பட்டதுமே நமது சமுதாய சீரழிவிற்கு முக்கிய காரணங்கள் என்பது மறுக்கப்பட முடியாத உண்மை. வளமையான வாழ்விற்கு ஒரு குழந்தையே சாலச் சிறந்தது என்று மக்களும், அரசாங்கமும் முடிவெடுத்ததின் விளைவாக, அண்ணன் ~ தம்பி, அக்காள்~ தங்கை, அத்தை – மாமா, பெரியம்மா – பெரியப்பா, சித்தி~ சித்தப்பா போன்ற உறவு முறைகள் இன்னும் சில காலங்களில் மறைந்து போய்விடும் என்பதில் ஐயமில்லை.

குடும்பத்தில் தனிமையில் வளரும் குழந்தைகளுக்கு மன்னித்தல், விட்டுக்கொடுத்தல், அனுசரித்து செல்லுதல் போன்ற விழுமியங்களை தெரிந்து கொள்ளவும், வாழ்வாக்கவும் வாய்ப்புகள் கிடைப்பதில்லை, எனவே தான் “நான்” என்ற ஆணவமும், அகங்காரமும் உயர்ந்தோங்கி வளர்கின்றன. சிறு பிராயத்தில் அக்காள் ~ தங்கைகளுடன் ஒன்றாக வளராத ஆண்பிள்ளைகளுக்கு சமூகத்தில் பெண்களின் உணர்வுகளை மதிக்கவும், புரிந்து கொள்ளவும் தெரிவதில்லை.

உலகத்தரம் வாய்ந்த பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் படிக்க வைத்து பிள்ளைகள் உயர்ந்த நிலைக்கு வரவேண்டும் என்று ஆசைப்படும் பெற்றோர், உளவியல் ரீதியாக வாழ்க்கையை எப்படி கையாள்வது என்று பிள்ளைகளுக்கு பயிற்றுவிக்க தவறி விடுகின்றனர். எந்தவித துன்பங்களும் தமது பிள்ளைகளை நெருங்கிவிடக் கூடாது என்பதில் கண்ணும் கருத்துமாக இருப்பதனால் பிள்ளைகள் வளர்ந்தபின் சமுதாயத்தில் சின்னஞ்சிறு சவால்களை கூட சந்திக்க திராணியற்று போகின்றனர்.

டிஜிட்டல் மயமாக்கப்பட்டு உலகம் நமது உள்ளங்கையில் வந்துவிட்டது உலகின் எந்த மூலையில் இருக்கும் நபரையும் விரல் நுனியில் தொடர்பு கொண்டு பேசிவிட முடியும். ஆனால் ஒரே குடும்பத்தில் ஒன்றாக இருக்கும் பெற்றோரும், பிள்ளைகளும் பேசிக்கொள்ள நேரமில்லாத விந்தை உலகத்தில் குடும்பங்கள் தொலைந்து கொண்டிருக்கின்றன. குடும்பங்களுக்கு தேவையான உண்மையான அன்பின் வலிமையை உணர்ந்து கொள்ள அவசியமற்று போய்விடுகிறது.

இவ்வாறு குடும்பங்களின் புனிதமும், மாண்பும், மங்கி வருவதை கண்ணோக்குகையில் வருங்கால சந்ததியினருக்கு குடும்பம் என்ற அமைப்பே இல்லாமல் போகும் அபாயம் காத்திருக்கிறது.

இந்த நிலை மாற நாம் என்ன செய்ய வேண்டும்? குடும்பங்களைப் பேணிகாப்பதில் குடும்ப உறுப்பினர்களாகிய நமது கடமை என்ன? சற்றே சிந்தித்து செயல்படுவோம். அனைத்திற்கும் மேலாக அவரது ஆட்சியையும், அவருக்கு ஏற்புடையவற்றையும் நாடுங்கள், அப்போது இவையனைத்தும் உங்களுக்கு சேர்த்துக் கொடுக்கப்படும் (மத் 6:33) என்ற இறைவார்த்தையை உள்ளத்தில் இருத்தி கடவுளுக்கு முன்னுரிமை கொடுக்க உறுதி ஏற்க வேண்டும்.

அலைபேசி, தொலைக்காட்சி போன்ற பொழுது போக்குகளை தவிர்த்துவிட்டு ஒருவேளை உணவையாவது குடும்பமாக அமர்ந்து உட்கொண்டால் உறவுநிலை மேம்படும், மன்னித்தலும், நன்றி கூறுதலும், ஒருவரை ஒருவர் பாராட்டுவதும் நமது குடும்பங்களின் அன்றாட செயல்பாடுகளாக வேண்டும். நாள் முழுவதும் பரபரப்பான பணிகளில் நேரத்தை செலவழிக்கும் நாம் சிறிது நேரமாவது குடும்ப செபத்தில் இணைந்திருந்து கடவுளோடு உறவாடுவதில் ஆர்வம் காட்ட வேண்டும். உறவுகளின் சுக, துக்க நிகழ்வுகளில் குடும்பமாக பங்கேற்க முயற்சிக்கவும் , உறவுகளை உறுதிபடுத்தவும் திட்டமிடல் வேண்டும். திருக்குடும்பத்தின் விழுமியங்களை மேல்வரிச் சட்டமாக கொண்டு வாழ்வதற்கு ஒவ்வொருவரும் கற்றுக் கொள்ள வேண்டும்.

படைப்பின் நீட்சியில் பங்கு கொள்ளும் உரிமையை குடும்பத்தின் வழியாக கடவுள் மனிதருக்கு வழங்கியுள்ளார். எனவேதான் ஏழு அருள் அடையாயங்களில் ஒன்றாக திருமணமும் இடம் பெற்றுள்ளது. கடவுளின் அருள் பாலிக்கும் இந்த திருமணம் என்ற இல்லறம் நல்லறமாக மாறி தழைத்தோங்கச் செய்வது நம் ஒவ்வோருவருடைய தலையாய கடமையாகும்.

அ. லிண்டா
சென்னை

புதிய இதயம்
திங்கள் மின்னிதழ்

# விவிலியம் அறிவோம்

## மத்தேயு நற்செய்தி

1 – 15 அதிகாரங்கள்

1. "ஐயா, நீர் விரும்பினால் எனது நோயை நீக்க உம்மால் முடியும்?" யார் யாரிடம் கூறியது?

2. தந்தையின் தருவுளம் யாது? என இயேசு கூறுகிறார்?.

3. .................................. போல முன்மதியுடைவர்களாகவும், புறாக்களைப் போல .................................. இருங்கள்.

4. பொருத்தக :

| | | |
|---|---|---|
| அ. பெருந்திரளான மக்கள் | - | இடுக்கமான வாயில் |
| ஆ. துன்புறுத்துவோர் | - | வானதூதர் |
| இ. வாழ்வுக்குச் செல்லும் வழி | - | ஈசாய் |
| ஈ. ஒபேது | - | கலிலேயா, தெக்கப்போலி |
| உ. அறுவடை செய்வோர் | - | இறைவனிடம் வேண்டுங்கள் |

5. நமது இறைவேண்டல் எவ்வாறு இருக்க வேண்டும் யார்? யார் செய்வது போன்று இருக்கக் கூடாது?

6. இயேசு மக்கள் மேல் பரிவு கொள்ளக் காரணம் என்ன?

7. இறைவாக்குகளும். திருச்சட்டமும் கூறுவது என்ன?

8. "துணிவோடு இருங்கள்" நான் தான் அஞ்சாதீர்கள்' என்று கூறியவர் யார்? உண்மையாகவே நீர் இறைமகன்" என்றவர்கள் யார்?

9. கனவில் தோன்றி செய்தி அறிவித்தவர் யார்? யாருக்கு? எத்தனை முறை?

10. ஞானம் மெய்யானது என்பதற்கு சான்று யாது?

Prepared by
Anu
Tuticorin

குறிப்பு : கண்டிப்பாக அதிகாரம், வசனம் எழுதவும். விடைகளை அனுப்பவேண்டிய கடைசி நாள் : **25.01.22**

விடைகளை அனுப்பவேண்டிய முறை

whatsapp : 94867 45500
email : newheartmeg@gmail.com

# Do you spend 3.16 minutes reading a social media post?

*Dr. Adrian Lee Yuen Beng, Malaysia*



This post won't take more than 3.16 minutes to read. You can use a stopwatch if you wish. Not yet, I'll let you know when. Don't skip! Read till the end. It just might help build your faith.

Stopwatch ready? 3.16, remember that! And go!

How many social media accounts do you own? A Tik Tok account? Instagram? Facebook? Do you spend more than 3.16 minutes watching a YouTube video?

I, too, have done the above. But what's wrong with following my favourite influencers? Or in checking out what's happening on Facebook? I'm not hurting anyone by posting a story to my 316 followers about what I've done, how I feel, the food I've eaten, the person I like...We've all used social media to inform others how we think and feel or searched for answers to the 316 questions we have.

Let's ask ourselves, how much time do we spend on social media in a day, and why exactly are we on social media? Do we spend more than 3.16 minutes a day on social media?

These are questions I've asked myself countless times. Time also seems to pass so quickly as we scroll through story after story and post after post. Are you still with me? Great! Did it seem like 3.16 minutes have passed? I'm not timing, are you?

Perhaps let's spend a little bit of time using social media to build our faith. But how do we do that? Social media and our Catholic faith?

If you've turned on "notifications" for that celeb, let's spend a few minutes searching for a page about Jesus that offers updates about our Catholic faith? Found it? Turn on notifications for that page! Indeed, we can find more than 3.16 of such pages.

As we find ourselves belonging to a virtual "army" of our favourite bands, why not be a member of the virtual "army" of Christ too? Many social media groups offer prayers, advice, and information about the Catholic faith. Time: 3:16 yet?

Constantly find yourself liking the posts of your favourite influencer but don't know why? Learn more about Christ, Mother Mary, or the Bible, and let our lives be influenced by the greatest influencer himself, with more than 3.16 trillion followers, Jesus Christ!

Before you know it, we'll find posts about our faith on our feed every now and then. Take 3.16 seconds to pause and read one as we scroll through post after post on social media. We would've unconsciously read a short prayer, a Bible verse, or information about our faith.

What's with 3.16? That's the number of the most famous verse in the Bible. Don't believe me? Check it out. I did! Took me less than 3.16 seconds to do so. Don't believe me, try it!

*Finding Happiness*

# "If you can manage to make a person happy, then you can change their whole world"



Once upon a time a group of 50 to 60 people were attending a meeting, after a while the host suddenly stopped speaking and gave each and every one a balloon, he then told the guests to write their name on it. After everybody finished, he put all the balloons in a separate room and locked it. He then started talking and explaining again.

When the meeting finally ended, he gathered the attendees and brought them to the room where all the balloons were situated and told them to search for the balloon which had their name on it within ten minutes. Everyone searched for their balloons desperately by pushing and shoving each other, in the end nobody was able to find their own balloon, now the host called each and everyone to pick a random balloon and he told them to give it back to the respective owners, now everybody had their own balloons. The host later told that everyone in the world is searching for their happiness, but it is fruitless. We as children should help each other to find their happiness so that everybody would be content.

If we want happiness, we must help others to find their own, show kindness, pray for them, create a bond with them if you follow these, in the end when they find their happiness yours will follow you back.

*— Salinda Alexander*
*Chennai*

*Mother Mary*

# Do not fear, Am I not here who am your Mother? Are you not in the folds of my mantle? In the crossing of my arms? Is there anything else you need?



The Blessed Virgin, our Mother Mary, mother of our Lord Jesus Christ spoke these words to Juan Diego in Guadalupe, Mexico during one of her apparitions. She is asking us the same question today and assuring us that no matter where you are and what is happening in your life, she is right beside each one of us waiting to help her children in their needs.

Here, I would like to share my faith journey with Mother Mary and her leading me to Son Jesus Christ. I believe that authentic witnesses are the pillars of our church. The apostles were the first witness of the life and wonders of our Lord Jesus, like wise I pray that each one of you can have a deeper relationship with our Lord and Mother Mary and stand as a witness to this broken and hurting world. The Mystical Body of Christ needs the gentle and perfect ministrations of the purest hands of Mary. She is sent from heaven to nurse the ailing members of the Mystical Body to restore health to the church wheresoever she is weakened by sin or poisoned by evil.

Each one of us have a unique relationship with our Lord Jesus and Mother Mary, my journey with the Blessed Mother started after I came to know about the love of Mother Mary for me and all her children. It was she who found this lost sheep and brought her to Jesus her son. Born a cradle catholic, I went to mass every Sunday and then went along with my life. I loved going to church from a young age. I loved Jesus but like many ignorant Catholics/ Christians, I was a little scared to get close to our Mother Mary as I didn't want to honor her more than Jesus.

Later I came to know that the closer you get to her, she will bring you closer to her Son and obtain for us many graces from heaven. She, being my good mother was waiting patiently for me to call upon her for help. She was so close to me, and she was carrying me in her arms all along, but I didn't realize it earlier.

I encourage all of you my dear brothers and sisters in Christ to not keep your distance or to be afraid to get close to our Mother Mary. She is the mother of Jesus Christ our Lord and so she is also the Mother of the church, all baptized

Christians, and non-Christians as well. She loves you more than any person on this earth and she wants to see every one of her children to be in heaven with her Son Jesus Christ.


"Woman, behold, your son. Then he said to the disciple, Behold your mother", and from that hour the disciple took her into his home. - John 19: 26-27
This is exactly what Jesus said to me and says to each one of us today. Jesus is delighted when we go to him through his beloved mother. Its not that he is not all powerful, but he rejoices in giving that honor to his Mother, that's the reason he gave us his mother from His cross.

I made my first confession as all of us Catholics do during my First Holy Communion and then after a year or so I lost the habit of going to confession, sadly like many of my Catholic/ Christian brothers and sisters, I too in my ignorance started telling myself, I will confess directly to God, why go to a priest? For 20 long years, I never went to confession but received the Eucharist during mass not knowing what a great sin I was committing and causing harm to my body and soul because of this.

I know many of you can relate to me, I ask dear Christians, do we really confess our sins directly to God. We are fooling ourselves; how do you think that we can stand in front of a Holy of Holy God and confess all our sins but not to a priest who is more like you and me in his weakness? Do you think our sinful souls can bear to look at the face of this Holy just Judge? I humbly request my dear Christians who have been postponing your confession for many years now to please find a priest and confess and get right with God before its too late in your life.

God in his divine love and mercy chose to intervene, He had enough of my nonsense, I guess. He allowed a great pain and suffering in my life, I am so very grateful to Jesus for that, I prayed a lot and prayed the rosary everyday, one day, the pain was excruciating, and, in my ignorance, I was asking God, what sin did I commit that you are punishing me now with this pain, that's a dangerous question to ask God.

Indeed, he wasn't punishing me for my sins, but he wanted me to repent and in his divine providence he was allowing that suffering and using it to cleanse me of my sin.



Jesus replied immediately by bringing to my mind all the sins I had committed all these years. At that moment, I felt so guilty and repentant of all my sins. I told God when I am well, I will go to confession. I was feeling better after that, after few months, I wanted to go for confession but was afraid. The guilt and what the priest would think about me, was blocking me to go to a priest.

**"Come now, let us set things right, says the LORD: Though your sins be like scarlet, they may become white as snow; Though they be red like crimson, they may become white as wool."**
**- Isaiah 1:18**

When I went to Vailankanni, while I was praying in front of our Mother Mary statue, she gave me the courage and strength to go to confession. With rosary in one hand and legs shivering, I reached the confessional. I made a good confession and when I heard the softest voice of a priest giving me absolution, I felt as though Jesus's Precious Blood was cleansing me and pouring over my head.

**"If we acknowledge our sins, he is faithful and just and will forgive our sins and cleanse us from every wrongdoing."**
**- 1 John 1:9**




With tears rolling down my cheeks, my soul was rejoicing. I felt like a heavy burden was lifted from my shoulder. I felt like a bird free from a cage. I was literally dancing my way back to the church to thank my Mother Mary and Jesus.

I sincerely hope and pray that everyone of you can experience this at your confession because it is real. It's our Jesus waiting in the confessional for us loving and blessing us through our priests. From that day onwards I have surrendered myself and my soul in the hands of my Mother Mary and she has always guided me to Jesus lovingly in a motherly way.

This is my journey of reconciliation with Jesus through Mary my mother.

*— Jennifer Dominic, USA*



# REAL HERO

**B.Mariette Harshita, Chennai**

*At the age of 10, I went to Vailankanni for the Annual Feast with my parents. My parents and I walked all the way to Vailankanni from Nagapattinam. We didn't have a place to sit too. As the Holy Flag of Mother Mary was raising up and being hoisted I felt a Divine Experience in me and I felt the presence of God during that time. I have never had such an experience before and it was exhilarating.*

*The only Son of God came to save us from our inequities. He is the true and real hero. Now in this fast paced world we are influenced by cinema and the heroes. They are not real heroes, rather they are created to attract us. Cinematic heroes are more violent, but Jesus came to save us and fight for the truth through non-violence.*

*He is the real hero. Kids of these days don't even remember their parent's birthdays, but they know the birthdays of the celebrities. My parents are Life Skills trainers, once while talking about Idol worship and hero worship at a school my Mother asked a student the birthday of a famous film star at once a boy gave the answer., when he was asked about his Father's birthday he did not have an answer.*

*This is how the world is, we should avoid idol worship and worship the real, true and the living Eternal God and Hero.*

*Yes, Jesus is the real hero, by trusting and believing him we also move forward to be the new hero of our life.*

**"The life of discipleship is not the hero worship we would pay to a good master, but obedience to the Son of God"**

**— Dietrich Bonhoeffer**

புதிய இதயம்
திங்கள் மின்னிதழ்

இதய அன்பர்களே...

# புதிய இதயம்
## வழி நடத்தும்

| | | | |
|---|---|---|---|
| 11.01.2022 | - | அன்பு செய்... அறம் போற்று...<br>மாற்றுத்திறனாளிகளின் மாற்றம் நோக்கி |  |
| 12.01.2022 | - | உன்னால் முடியும்... உன்னால் விடியும்...<br>மாணவர்களின் விடியல் நோக்கி |  |
| 13.01.2022 | - | வாழ வை... வாழ்ந்து காட்டு...<br>"கைம்பெண்கள்" நலம் நோக்கி |  |

இடம்: சருகணி, சிவகங்கை மாவட்டம்.
நிகழ்வு: கருத்தமர்வு... நலத்திட்டம் வழங்கல்.

Editor and Publisher: **Rev. Fr. Aron**

**EDITORIAL BOARD**

1. Rev.Fr.Saminathan
2. Prof.Sathish Kumaran
3. A.Linda
4. Dr.Jose Suganya
5. Kalpana I.A.S.,
6. Anthony Devarajoo
7. Jennifer Dominic
8. Jesudoss
9. Rozario Lavaniyan
10. S.Rajesh

Creative and Design : J. Savari George



தனிமனித, குடும்பம், சமூகம் மற்றும் ஆன்மீகம் சார்ந்த உங்களது படைப்புகளை அனுப்ப வேண்டிய கடைசி நாள் 25.01.22. அனுப்ப வேண்டிய முகவரி

whatsapp : 94867 45500
email : newheartmeg@gmail.com

Pudhiya Idhayam Magazine, Sarugani, Devakottai (Taluk), Sivagangai (Dist.)
Tamil Nadu - 630 411. Ph: 94867 45500. Email: newheartmeg@gmail.com